பத்திரகாளியம்மன் கோயில் திருவிழா

► சிறப்பு அலங்காரத்தில் பத்திரகாளியம்மன்.

பட்டிவீரன்பட்டி, மே 1: பட்டிவீரன்பட்டியில் உள்ள பத்திரகாளியம்மன் கோயிலில் சித்திரை திருவிழாவினை முன்னிட்டு முளைப்பாரி ஊர்வலம் நடந்தது.

பட்டிவீரன்பட்டியில் சுமார் 700 ஆண்டுகள் பழமை வாய்ந்த பத்திரகாளியம்மன் கோயில் உள்ளது. இக்கோயிலின் சித்திரை திருவிழா 3 நாட்கள் நடைபெற்றது. இத்திருவிழாவின் முதல் நாள் கருப்பணசாமி பூஜை, பூசாரி அழைப்பு மற்றும் புலி ஆட்டம், ஒயிலாட்டம் வானவேடிக்கை, மேளதாளம் முழங்க அம்மன் கோவிலுக்கு எழுந்தருளும் நிகழ்ச்சியும், சுவாமி முளைப்பாரி நிகழ்ச்சியும் நடைபெற்றது. அதனைத் தொடந்து மாவிளக்கு பூஜை, பால்குடம் எடுத்தல், அம்மன் ஊஞ்சல் அலங்காரத்தில் எழுந்தருளும் நிகழ்ச்சிகளும், உலக நன்மைக்காக பெண்கள் பங்கேற்ற சிறப்பு 1008 குத்துவிளக்கு பூஜை போன்ற நிகழ்ச்சிகள் நடைபெற்றன. இந்த பூஜையில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட பெண் பக்தர்கள் பங்கேற்றனர்.

நேற்று ஆயிரக்கணக்கான முளைப்பாரி ஊர்வலத்துடன் மேளதாளம் முழங்க பத்திரகாளியம்மன் பூஞ்சோலைக்கு சென்றடைந்தது.

இவ்விழாவிற்கான ஏற்பாடுகளை இந்துநாடார்கள் உறவின்முறை சங்க நிர்வாகிகள் மற்றும் விழா குழுவினர் இணைந்து செய்திருந்தனர். விழாவினை முன்னிட்டு கலை நிகழ்ச்சிகள் மற்றும் வானவேடிக்கைகள் நடைபெற்றன. விழாவிற்கான பாதுகாப்பு ஏற்பாடுகளை பட்டிவீரன்பட்டி போலீசார் செய்திருந்தனர்.

திண்டுக்கல், தேனி மாவட்ட மக்களின் குடிநீருக்காக

மஞ்சளாறு அணையில் தண்ணீர் திறப்பு

தேவதானப்பட்டி, மே 1: தேனி, திண்டுக்கல் மாவட்ட மக்களின் குடிநீருக்காக மஞ்சளாறு அணையில் தண்ணீர் திறக்கப்பட்டது. இதனால், கரையோர மக்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடப்பட்டுள்ளது.

தேனி மாவட்டம் தேவதானப்பட்டி அருகே உள்ள மஞ்சளாறு அணை நீர்ப்பிடிப்பு பகுதிகளில் கடந்த ஆண்டு வடகிழக்கு பருவமழையின் போது மழை பெய்யாததால் அணை அதன் முழு கொள்ளளவை எட்டாத நிலையில் அணையில் இருந்து உபரி நீர் திறக்கப்படவில்லை.

இதனால் மஞ்சளாறு ஆற்றுப்பகுதி முற்றிலும் வறண்டு குடிநீர் மற்றும் நிலத்தடி நீர்மட்டம் வெகுவாக பாதித்துள்ளது. இதனால் தேனி, திண்டுக்கல் மாவட்ட மஞ்சளார் ஆற்றங்கரையோர பகுதி மக்களுக்கு குடிநீர் தட்டுப்பாடு ஏற்படும் நிலை ஏற்பட்டது.

இந்த நிலையில் தமிழக அரசு உத்தரவின் பேரில் தேவதானப்பட்டி அருகே உள்ள மஞ்சளாறு அணையில் இருந்து இன்று தேனி, திண்டுக்கல் மாவட்ட மஞ்சளாறு ஆற்றங்கரையோர பகுதி மக்களின் குடிநீர் தேவை மற்றும் நிலத்தடி நீர்மட்ட உயர்விற்காக வினாடிக்கு 200 கன அடி நீரை பொதுப்பணித்துறையினர் திறந்து விட்டனர்.

தேனி மாவட்ட பகுதியான தேவதானப்பட்டி, கெங்குவார்பட்டி, ஜி.கல்லுப்பட்டி, உள்ளிட்ட பகுதிகளுக்கும் திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ள தும்ளப்பட்டி, வத்தலக்குண்டு முதல் சிவஞானபுரம் வரையிலான மஞ்சளாறு ஆற்றங்கரையோர பகுதி மக்களின் குடிநீர் தேவைக்காகவும் நிலத்தடி நீர்மட்ட உயர்வுக்காகவும் நேற்று முதல் மூன்று நாட்களுக்கு அணையில் இருந்து திறக்கப்படவுள்ளதாக பொதுப்பணித்துறையினர் தெரிவித்துள்ளனர்.

மேலும் நேற்று 200 கன அடி நீர் திறக்கப்பட்ட நிலையில் மூன்று நாட்கள் தண்ணீர் குடிநீருக்காக திறக்கப்பட்டதாக பொதுப்பணித்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இதனால் தேனி, திண்டுக்கல் மாவட்ட மஞ்சளாறு ஆற்றங்கரையோர பகுதி மக்கள் ஆற்றில் இறங்கவும், குளிக்கவும், கால்நடைகளை மேய்ச்சலுக்கு விடவோ வேண்டாம் என எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

ஐடி நிறுவன ஊழியர் வீட்டில் 25 பவுன் நகை, பணம் திருட்டு

போடி, மே 1: போடி அருகே ஐடி கம்பெனி ஊழியர் வீட்டில் 25 பவுன் நகை, ரூ.3 லட்சம் திருடுபோனது குறித்து போலீசார் விசாரணையை தொடங்கியுள்ளனர்.

தேனி மாவட்டம் போடி அருகே சில்லமரத்துப்பட்டியை சேர்ந்தவர் பழனியப்பன் மகன் தனபிரசாத்(36). சென்னையில் தனியார் ஐடி நிறுவனத்தில் பணிபுரிந்து வருகிறார். கடந்த 2 நாட்களுக்கு முன்பு பழனியப்பன், அவரது மனைவி ஜெயந்தி ஆகியோர் வீட்டை பூட்டிவிட்டு உறவினர் வீட்டு நிகழ்ச்சிக்காக பழநிக்கு சென்றனர். நேற்று முன்தினம் காலை ஜெயந்தி தனது வீட்டு காவலாளியை செல்போனில் தொடர்புகொண்டு, செடிகளுக்கு தண்ணீர் ஊற்றுமாறு கூறியுள்ளார்.

அப்போது, வீட்டு கதவு பூட்டு உடைக்கப்பட்டு திறந்து கிடப்பதாக காவலாளி தெரிவித்துள்ளார். இதையடுத்து, அவர்கள் வீட்டுக்கு நேரில் வந்து பார்த்தபோது, கீழ்தளம் மற்றும் மாடியில் பீரோ, கப்போர்டு ஆகியவை உடைக்கப்பட்டு 24.5 பவுன் தங்க நகைகள், வெள்ளி பொருட்கள், ரூ.3.06 லட்சம் ரொக்கம் ஆகியவை திருடுபோனது தெரியவந்ததாம்.

இதுகுறித்து தனபிரசாத் அளித்த புகாரின் பேரில் போடி தாலுகா போலீசார் வழக்குப்பதிவு செய்தனர்.

இன்ஸ்பெக்டர் செல்வம், எஸ்ஐ சேகர் ஆகியோர் சம்பவ இடத்தில் நேரில் விசாரணை நடத்தி, திருட்டில் தொடர்புடைய மர்ம நபர்களை வலைவீசி தேடி வருகின்றனர்.

வெளிநாட்டு வேலைவாய்ப்பா?

கவனமுடன் விண்ணப்பிக்க அறிவுறுத்தல்

திண்டுக்கல், மே 1: வெளிநாட்டு வேலைக்கு செல்பவர்கள் இந்தியத் தூதரகங்களை தொடர்பு கொண்டு வேலையின் உண்மைத் தன்மையை உறுதி செய்ய வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

தமிழ்நாட்டைச் சார்ந்த பல்வேறு உயர் தொழில்நுட்பக் கல்வி பயின்ற இளைஞர்களை சமூக வலைதளம் மூலமாக வெளிநாடுகளில் தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களில் டிஜிட்டல் சேல்ஸ் அண்ட் மார்கெட்டிங் எக்ஸிகியூட்டிவ், தரவு உள்ளீட்டாளர் வேலை, அதிக சம்பளம் என்ற பெயரில் சுற்றுலா விசாவில் ஏமாற்றி அழைத்து சென்று கால் சென்டர் மோசடி மற்றும் கிரிப்டோ கரன்சி மோசடி போன்ற சட்ட விரோத செயல்களில் கட்டாயப்படுத்தி ஈடுபடுத்தப்படுவதாக தகவல்கள் வருகிறது.

வெளிநாடுகளுக்கு வேலை, கல்வி மற்றும் வேலை நிமித்தமாக செல்லும் இளைஞர்கள், ஒன்றிய அரசில் பதிவு செய்யப்பட்ட முகவர்கள் மூலம் வேலைக்கான விசா, முறையான பணி ஒப்பந்தம், என்ன பணி போன்ற விவரங்களைச் சரியாக தெரிந்து கொள்ள வேண்டும். உரிய விவரங்கள் தெரியாவிடில், தமிழ்நாடு அரசின் அயலகத் தமிழர் நலத்துறை அல்லது குடிபெயர்வோர் பாதுகாப்பு அலுவலர், சென்னை அல்லது சம்பந்தப்பட்ட நாட்டில் உள்ள இந்தியத் தூதரகங்களை தொடர்பு கொண்டு, பணி செய்யப்போகும் நிறுவனங்களின் உண்மைத் தன்மையை உறுதி செய்து கொள்ள வேண்டும்.

இந்திய வெளியுறவுத்துறை மற்றும் வேலைக்குச் செல்லும் நாடுகளிலுள்ள இந்திய தூதரகங்களின் இணையதளங்களில் வெளியிடப்படும் அறிவுரைகளின் படி வெளிநாட்டு வேலைக்கு செல்ல வேண்டும். அங்கீகரிக்கப்பட்ட முகவர்களின் பட்டியலை www.emigrate.gov.in என்ற இணையதளத்தில் அறிந்து கொள்ளலாம் என அதிகாரிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பூட்டிய வீட்டில் கொள்ளை முயற்சி

வேடசந்தூர், மே 1: வேடசந்தூர் மைனர் காலனியை சேர்ந்தவர் தங்கவேல் (53). இவரது மனைவி மாலதி (45). இருவரும் கடந்த மாதம் 24ம் தேதி, வீட்டை பூட்டி விட்டு பெங்களூருவில் உள்ள தனது மகள் வீட்டிற்கு சென்று விட்டனர். இந்நிலையில் நேற்று, எதிர்வீட்டைச் சேர்ந்த சண்முகம் என்பவர், தங்கவேலு வீட்டின் கதவு உடைக்கப்பட்டிருந்ததைக் கண்டு வேடசந்தூர் போலீஸ் நிலையத்தில் தகவல் தெரிவித்தார். உடனடியாக சம்பவ இடத்திற்கு வந்த இன்ஸ்பெக்டர் கணேசமூர்த்தி, எஸ்.ஐ.ஜெயலட்சுமி மற்றும் புலனாய்வு பிரிவு போலீசார் வீட்டின் உரிமையாளருக்கு தகவல் தெரிவித்து வீட்டை சோதனை இட்டனர். அதில் தங்கவேல் கொடுத்த தகவலின் படி அவர் ரகசிய இடத்தில் வைத்திருந்த 50 லட்சம் மதிப்புள்ள நகைகள் திருடு போகாமல் அப்படியே இருந்தது தெரிய வந்தது.

இதுகுறித்து போலீசார் கூறுகையில், வீட்டை பூட்டி விட்டு வெளியூருக்கு செல்பவர்கள் முறையாக போலீஸ் நிலையத்திற்கு தகவல் தெரிவிக்கவேண்டும். மேலும் வீடுகளில் திருட்டு சம்பவங்கள் நடைபெறாமல் தடுக்கவும், பாதுகாப்பு காரணங்களுக்காகவும் சிசிடிவி கேமரா பொருத்த வேண்டும் என அறிவுறுத்தினர்.

அம்மன் கோயில் கும்பாபிஷேகம்

► பழநி ரெணகாளியம்மன் கோயிலில் கும்பாபிஷேக விழா நடந்தது.

பழநி, மே 1: பழநி ரெணகாளியம்மன் கோயில் கும்பாபிஷேக நிகழ்வில் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

பழநி நகரின் மையப்பகுதியில் புதுதாராபுரம் நால்ரோடு சந்திப்பில் ரெணகாளியம்மன் கோயில் உள்ளது. பிரசித்தி பெற்ற இக்கோயிலில் நேற்று கும்பாபிஷேக நிகழ்ச்சி நடந்தது. கும்பாபிஷேகத்தையொட்டி யாகசாலை அமைக்கப்பட்டு, சிறப்பு பூஜைகள் நடந்தன. தொடர்ந்து திருமறை, திருமுறை பாராயணம், திரவ்யாஹுதி, பூர்ணாகுதி, கன்யா பூஜை, சுமங்கலி பூஜை, வடுபூஜை, திருலெட்சுமி பூஜை, பிம்பசுத்தி, ரக்சாபந்தனம், ஸ்பர்ஸாகுதி, பொருள் வேள்வி உள்ளிட்ட சிறப்பு பூஜைகள் நடந்தன.

பழநி நகரின் மையப்பகுதியில் புதுதாராபுரம் நால்ரோடு சந்திப்பில் ரெணகாளியம்மன் கோயில் உள்ளது. பிரசித்தி பெற்ற இக்கோயிலில் நேற்று கும்பாபிஷேக நிகழ்ச்சி நடந்தது. கும்பாபிஷேகத்தையொட்டி யாகசாலை அமைக்கப்பட்டு, சிறப்பு பூஜைகள் நடந்தன. தொடர்ந்து திருமறை, திருமுறை பாராயணம், திரவ்யாஹுதி, பூர்ணாகுதி, கன்யா பூஜை, சுமங்கலி பூஜை, வடுபூஜை, திருலெட்சுமி பூஜை, பிம்பசுத்தி, ரக்சாபந்தனம், ஸ்பர்ஸாகுதி, சாந்தி, வேதிகா பூஜை, புனிதபூஜைகள் நடைபெற்றன. நேற்று காலை விநாயகர் வழிபாடு, பிம்ப சுத்தி, நாடி சந்தனம், கோ பூஜை உள்ளிட்ட பூஜைகளுடன் யாக பூஜைகள் நடந்தன. அதைத் தொடர்ந்து கடங்கள் கோயில் கோபுரத்திற்கு புறப்பாடானது.

அதன்பின்னர் வேதமந்திரங்கள் முழங்க கோயில் கோபுர கலசங்களில் புனித நீர் ஊற்றப்பட்டு கும்பாபிஷேகம் நடைபெற்றது. இதனைத்தொடர்ந்து பக்தர்களுக்கும் பொதுமக்களுக்கும் அன்னதானம் வழங்கப்பட்டது. விழாவிற்கான ஏற்பாடுகளை ஊர் பொதுமக்கள் மற்றும் விழா குழுவினர் செய்திருந்தனர்.

வடமதுரை: வடமதுரை அருகே தென்னம்பட்டி கிராமத்தின் வடக்கு தெருவில் உள்ள மாரியம்மன் கோயிலில் கும்பாபிஷேகம் நேற்று நடைபெற்றது. முன்னதாக விநாயகர், புண்ணியாவாதீனம், வாஸ்து

தேங்கிய கழிவுநீர்...

► மதுரை-துவரங்குறிச்சி தேசிய நெடுஞ்சாலையில் நத்தம் அருகே பள்ளபட்டி அணுகு சாலை பகுதியில், தேங்கியுள்ள கழிவுநீரை அகற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மானாவாரி நிலங்களில் பருத்தி பயிரிட ஏற்றது

வேளாண்துறை ஆலோசனை

பழநி, மே 1: மானாவாரியில் பருத்தி பயிரிடும் முறை குறித்து வேளாண் துறையினர் ஆலோசனை வழங்கி உள்ளனர்.

மானாவாரியில் பருத்தி பயிரிட எல்.ஆர்.ஏ - 5166, சுமங்கலா, கே-11, எஸ்.வி.பி.ஆர்-2, கே.சி-2 ஆகியவை ஏற்ற ரகங்கள் ஆகும். 45*15 சென்டிமீட்டர் இடைவெளியில் பார்கள் அமைத்து எக்டேருக்கு 15 கிலோ என்ற அளவில் விதைக்க வேண்டும். பஞ்சு நீக்கிய விதையுடன் 3 கிராம் பாலிகோட், கார்பன்டைசிம் 2 கிராம், இமிடர்குளோபரிட் 7 கிராம், சூடா மோனாஸ் ஃப்ளூரசன்ஸ் 10 கிராம், அசோபாஸ் 40 கிராம் கலந்து விதைப்பதால் விதைத்த 45வது நாள்வரை சாறு உறிஞ்சும் பூச்சிகளிலிருந்து பயிரினை காத்து ஆரம்பத்தில் நல்பயிர் வளர்ச்சி அடைய முடியும்.

நுண்ஊட்டச்சத்தாக எக்டேருக்கு சிங்க்சல்பேட் 50 கிலோ அடியுரமாக அளிப்பதால் வேர் அழுகல் நோய் கட்டுப்படுத்தப்பட்டு விளைச்சல் அதிகரிக்கிறது. பயிரின் வயது 150 நாட்களுக்குள் இருக்கும்போது, 60 கிலோ தழைச்சத்து இட வேண்டும். 150 நாட்களுக்கு மேல் ஆகும்போது தழைச்சத்து 80 கிலோவிற்கு மேல் இட வேண்டும். வீரிய ஒட்டு ரகங்களுக்கு தழைச்சத்து 120 கிலோ இட வேண்டும். மேற்காணும் உரத்தில் மணிச்சத்து முழுவதும் மற்றும் தழைச்சத்து, சாம்பல் சத்தினை பாதி அடியுரமாகவும் இட வேண்டும்.

களை முளைப்பதற்கு முன் ஃப்ளூகுளோரலின் 2.2 லிட்டர் அல்லது பென்டிமெத்தலின் 3.3 லிட்டர் ஆகியவற்றில் ஒன்றினை விதைத்த 3வது நாள் தெளித்து கட்டுப்படுத்த வேண்டும். உயிர் உரமாக 2 ஆயிரம் கிராம் அசோஸ்பரில்லத்துடன் 2 ஆயிரம் கிராம் பாஸ்போபாக்டீரியா இட வேண்டும். ரசாயன உரங்களாக இருந்தால் மண் பரிசோதனை செய்து மண் வள அட்டை பெற்ற பின்பு உரமிட வேண்டும். பரிசோதனை செய்யாத நிலங்களுக்கு களை முளைப்பதற்கு முன் ஃப்ளூகுளோராலின் 2.2 லிட்டர், பென்டிமெத்தலின் 3.3 லிட்டர் ஆகியவற்றில் ஒன்றினை விதைத்த 3வது நாள் தெளித்து கட்டுப்படுத்த வேண்டும்.

அடி உரமாக எக்டேருக்கு 50 கிலோ சிங்க் சல்பேட் அளித்தால் நுண்ஊட்ட சத்து அளிக்க வேண்டும். இதுதொடர்பான கூடுதல் விபரங்களுக்கு விவசாயிகள் அந்தந்த பகுதி வேளாண் அலுவலரையோ அல்லது பழநி வட்டார வேளாண் உதவி இயக்குநர் அலுவலகத்தையோ தொடர்பு கொள்ளலாமென வேளாண்துறையினர் தெரிவித்துள்ளனர்.

க்ரிஹம் ஹவுசிங் ஃபைனான்ஸ் லிமிடெட்

பதிவு பெற்ற அலுவலகம்: 6 ஆவது தளம், B பில்டிங், கங்கா ட்ரினோ, லோஹேகான், புனே, மகாராஷ்டிரா-411014. கிளை அலுவலகம் அலகு: 2வது தளம், டிகேஎஸ் டவர்ஸ், எண். பி/1/45/4, தேனி- கம்பம் மெயின் ரோடு, டீன்இபி எதிரில். பழனிசெட்டிபட்டி. தேனி, தமிழ்நாடு - 625531

மின்-ஏலம்- விற்பனை அறிவிப்பு
சர்ஃபாசி சட்டத்தின் கீழ் கடனீட்டு அசையா சொத்து விற்பனை

பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 (சட்டம்) மேலும் கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 (விதிகள்) விதி 8 மற்றும் 9 கீழ் அசையா சொத்துகளின் மின்-ஏலம் விற்பனை அறிவிப்பு. இங்கே உள்ள அறிவிப்பின்மூலம் பொதுமக்களுக்கு பொதுவாகவும், கடன்தாரர்கள்/ உப-கடன்தாரர்கள்/ அடமானதாரர்கள் / ஜாமின்தாரர்களுக்கு குறிப்பாகவும் தெரிவிக்கப்படுவது என்னவென்றால், கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடனீட்டுச் சொத்துகளானது க்ரிஹம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்டின் இதற்குப் பிறகு சட்டத்தின்படி கடனீட்டு கடனீந்தோர் என்று குறிப்பிடப்படும்) அதிகாரப்பூர்வ அதிகாரியால், சட்டத்தின் பிரிவு 13 (12) இன் படியும், கடனீட்டு சொத்துகளின் (அமலாக்கம்) சட்டத்தின் பிரிவு 13(2) மற்றும் விதிகள் 8 &9 இன் கீழ் அளிக்கப்பட்ட அதிகாரத்தின்படி சுவாதீனம் செய்யப்பட்டுள்ளது.

கடனீட்டு சொத்துகள் அவை **எங்கே உள்ளனதோ, என்ன உள்ளனதோ, எப்படி உள்ளனதோ,** அதே அடிப்படையில் **03.06.2026 தேதியன்று** மின்-ஏலம் மூலமாக விற்பனை செய்யப்படும். இதன் மூலம் பொது மக்களுக்குத் தெரிவிக்கப்படுவது என்னவென்றால், மின்- ஏல இயங்குதளத்தில் அதன் இணையதள லிங்க்கில் அதாவது, https://www.bankeauctions.com மூலமாக மின்-ஏலம் நடைபெறும்.

விற்பனையின் விரிவான நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகளை தெரிந்து கொள்ள க்ரிஹம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்/கடனீட்டு கடனீந்தோரின் இணையதளம் அதாவது, www.grihumhousing.com- ஐ பார்வையிடவும்.

வ. எண்.	முன்மொழிவு எண். வாடிக்கையாளர் பெயர் (A)	கோரிக்கை அறிவிப்பு தேதி மற்றும் நிலுவைத்தொகை (B)	சுவாதீன தன்மை (C)	சொத்தின் விவரம் (D)	நிர்ணய விலை (E)	முன்வைப்புத் தொகை ((நிர்ணய விலையில் 10%)(F)	முன்வைப்புத் தொகை செலுத்தும் தேதி (G)	ஏல உயர்வுத் தொகை (H)	சொத்தை பார்வையிடும் தேதி மற்றும் நேரம் (I)	ஏலத் தேதி மற்றும் நேரம் (J)	தெரிந்த வில்லங்கங்கள்/ நீதிமன்ற வழக்குகள் நிலுவைத்தது ஏதேனும் (K)
1	கடன் எண். LAP0494200000050 35965 R மணிகண்டன் (கடன்தாரர்) செல்லம்மாள் (உப கடன்தாரர்) ராசு சுகாஷினி M	அறிவிப்பு தேதி: 07.06.2025 மொத்த நிலுவைத் தொகை: 07.06.2025 தேதியில் செலுத்த வேண்டிய தொகை ரூ.10,77,170/- (ரூபாய் பத்து லட்சத்து எழுபத்தேழாயிரத்து நூற்று எழுபது மட்டும்) மற்றும் கடன் தொகையைத் திருப்பிச் செலுத்தும் காலம் வரையிலான கூடுதலான ஆண்டொன்றுக்கு 15.35% வட்டி.	கையக	தேனி மாவட்டம், பெரியகுளம் பதிவு மாவட்டம், பெரியகுளம் இணை -1 சார் பதிவு அலுவலகம், மேல்மங்கலம் கிராமம், வடுகபட்டி ஊராட்சி, வார்டு எண்.6, நாயக்கர் தெரு, வடுகபட்டி நத்தம் சர்வே எண்.1119/பகுதி, துணைப் பிரிவின்படி புதிய சர்வே எண்.1119/91, அடுத்த புதிய துணைப் பிரிவின்படி புதிய சர்வே எண். 2591/15 இல் உள்ள 337.5 ச.அடி பரப்பளவு (கிழக்கு மேற்கு: 13.5 அடி, தெற்கு வடக்கு: 25 அடி) உள்ள வீட்டு மனை சொத்தில் விண்ணப்பதாரர் ஆர்சிசி கட்டிடம் கட்டியுள்ளார். அதில் மின்சார இணைப்புடன் வழக்கமான பாதை உரிமைகளுடன் அனைத்து வசதிகளும் உள்ளது. மனையின் **எல்லைகள்: கிழக்கில்:** தெற்கு – வடக்கு தெரு, **மேற்கில்:** முனியாண்டிக்குச் சொந்தமான வீடு, **வடக்கில்:** நடராஜனுக்குச் சொந்தமான வீடு, **தெற்கில்:** செல்வத்துக்குச் சொந்தமான வீடு.	Rs. 1395079.00/- (ரூபாய் பதின்மூன்று லட்சத்து தொன்னூற்று ஐந்தாயிரத்து எழுபத்தொன்பது மட்டும்)	Rs. 139507.90/- (ரூபாய் ஒரு லட்சத்து முப்பத்து ஒன்பதாயிரத்து ஐந்நூற்று ஏழு மற்றும் பைசா தொன்னூறு மட்டும்)	02-06-2026 Before 5 PM	10,000/-	19-05-2026 (11AM – 4PM)	03-06-2026 (11 AM- 2PM)	எதுவுமில்லை

ஆர்வமுள்ள ஏலதாரர்கள்/கொள்முதலாளர்கள் ஏலப்புள்ளி சமர்ப்பிப்பதற்கு முன்பாக ஏலச்சொத்துகள் தொடர்பான விவரங்கள் மற்றும் கூடுதல் கட்டணங்கள், வில்லங்கங்கள், மூன்றாம் நபர் கோருரிமைகள் போன்ற சொத்து தொடர்பான விவரங்களை தெரிந்து கொள்ள அருகில் உள்ள கடனீட்டு கடனீந்தோர் கிளைக்குச் சென்றோ அல்லது தாங்களாகவே எல்லா அம்சங்களையும் கணக்கில் எடுத்துக் கொண்டு தெரிந்து கொண்டு தீர்மானிப்பு வேண்டும். சொத்து தொடர்பான சொத்து வரி, மின்சாரம்/தண்ணீர் ஆகியவற்றுக்கு செலுத்த வேண்டிய கட்டணங்கள் மற்றும் பிற கட்டணங்கள் உள்பட எந்தவிதமான செலவுகளையும் வெற்றிகரமான ஏலதாரரே ஏற்க வேண்டும்.

ஆர்வமுள்ள ஏலதார்கள் மின்-ஏலத்துக்கு தேவையான பயனாளர் அடையாள முகவரி, கடவுச் சொல் ஆகியவற்றை சேவை வழங்குநரிடம் C1 இந்தியா பிரைவேட் லிமிடெட், முகவரி: மனை எண்.68, 3 ஆவது தளம், கூர்யான், ஹரியானா–122003, உதவி எண்: 7291981124,25,26 உதவும் மின்னஞ்சல் முகவரி: Support@bankeauctions.com மூலமாகவோ, தொடர்பு நபர்: தாரணி P, மின்னஞ்சல் முகவரி: dharani.p@ctindia.com, தொடர்பு எண்.9948182222 மூலமாகவோ தொடர்பு கொண்டு அவர்களிடம் இருந்து பெற்றுக் கொள்ள வேண்டும். அதன் பிறகு ஆர்வமுள்ள கொள்முதலாளர்/ஏலதாரர்கள் கீழ்வரும் ஆவணங்களை சுயசான்றளிக்கப்பட்ட போன்றவற்றை மின்னஞ்சல் மூலமாகப் பதிவேற்றம் செய்ய வேண்டும். மின்–ஏலம் செயல்பாடு மீதான ஆன்லைன் பயிற்சியை அவர்களிடம் இருந்தே பெற வேண்டும். ஆர்வமுள்ள கொள்முதலாளர்/ ஏலதார்கள் அவர்களுடைய ஏல முன்வைப்புத் தொகையை (EMD) NEFT/RTGS/DD மூலமாக க்ரிஹம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் **ஆக்சன் புரஸ்ட்ஸ்** A/C, ICICI BANK LTD, கணக்கு எண்.091551000028 மற்றும் IFSC Code– ICIC0000915, **ஜிஜிஇஜி பேங்க் லிமிடெட்,** பான்ஞ்சில் டெக்னிகல் பார்க், கணபதி செனக் அருகில், 43/44, வினன் நகர்– 411014 என்ற கிளையில் செலுத்தத்தக்கவிதமாக ஏதேனும் தேசிய வங்கியிலோ அல்லது செட்யூல்டு வங்கியிலோ **02.06.2026** தேதி அன்றோ அதற்கு முன்னதாகவோ செலுத்த வேண்டும். மேலும் https://www.bankeauctions.com இணையதளம் வழியே தங்கள் லாக்இன் அடையாள முகவரி மற்றும் கடவுச்சொல் மூலம் இல் பெயரை முன்னதாகவே பதிவு செய்து கட்டணமில்லா மின்–ஏல பயிற்சி பெற பயனாளர் அடையாள முகவரி, கடவுச் சொல் ஆகியவற்றை சேவை வழங்குநரிடம் இருந்து பெற்றுக் கொள்ள வேண்டும். அதன் பிறகு ஆர்வமுள்ள கொள்முதலாளர்/ஏலதார்கள் கீழ்வரும் ஆவணங்களை சுயசான்றளிக்கப்பட்ட போன்றவற்றை மின்னஞ்சல் மூலமாகப் பதிவேற்றம் செய்ய வேண்டும். அவற்றின் மூல பிரதிகளை அவற்றின் மூல பிரதிகளை முகவரி: **கிங்ஸ்டோன்பார்க் கமர்சியல் காம்ப்ளெக்ஸ், எண்.19/1,** புதூர் நெடுஞ்சாலை, ராமலிங்க நகர், உறையூர், திருச்சி–620 017(தூர), மேலும் கைபேசி எண். +91 9597907666, மின்னஞ்சல் முகவரி baskaran.soudararajan@grihumhousing.com. தொடர்பு கொள்ள வேண்டும். மின்–ஏலத்தில் பங்கேற்பதற்கான விரிவான நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகளை தெரிந்து கொள்ள https://www.bankeauctions.com & www.grihumhousing.com– ஐ பார்வையிடவும். கடனீட்டு சொத்துகளின் (அமலாக்கம்) சட்டம்–2002 இன் விதி 8(6) இன் கீழ் கடன்தார்/ உப – கடன்தார் / அடமானதார்கள்/ ஜாமீன்தார்களுக்கு வழங்கப்படும் இந்த அறிவிப்பானது 30 நாள்கள் (முப்பது) அறிவிப்பு என்று கருதத்தக்கதாகும்.

உள்ளூர் மொழி வெளியீட்டில் அல்லது ஆங்கில செய்தித்தாள் வெளியீட்டில் உள்ளடக்கங்களில் ஏதேனும் வித்தியாசம் இருந்தால் பிசினஸ் ஸ்டான்டர்டு ஆங்கில செய்தாளில் வெளியிடப்பட்ட உள்ளடக்கமே ஏற்றுக் கொள்ளக் கூடியதாகும்.

நாள்: 01.05.2026, இடம்: தமிழ்நாடு

ஒம்/- அதிகாரப்பூர்வ அலுவலர், க்ரிஹம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்

விற்பனை மற்றும் புதிய சந்தா தொடர்பான விவரங்களுக்கு...

தினகரன்

890415677 7

9.30 AM - 6.00 PM